044

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 03
LWU 1412 – சட்ட முறைமை
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 04.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக. பகுதி (அ), (ஆ) வில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

பகுதி (அ) சட்ட முறைமை

1. இலங்கையின் சட்ட தோற்றுவாய்கள் என்ற வகையில் சட்ட வாக்கம்,, ஒப்புரவு, சமயம், மற்றும் சட்டவாளர்களுடைய கருத்துக்கள் என்பவற்றின் முக்கிய த்துவத்தை சுருக்கமாக ஆராய்க. (தோற்றுவாய்களுடைய உள்ளடக்கம் பற்றிய விரிவான விளக்கம் ஒன்று எதிர்பார்க்கப்பட மாட்டாது).

2. கெலேகம என்பது இலங்கையில் இருக்கும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாகும். அங்குள்ள பொரும்பான்மை வாசிகள் ஏழை விவசாயிகள் ஆவர். புஞ்சிரால, முதலிகே மற்றும் பண்டார ஆகிய குடும்பங்கள் செல்வந்த நிலச் சொந்த காரர்களாக இருப்பதோடு கிராமத்திலேயே மிக அதிகாரம் வாய்ந்த மக்களும் ஆவர். இக் குடும்பங்கள் பரம்பரைபரம்பரையாக பிள்ளைகள் உட்பட கிராமத்தவர்களை தமது வீடுகளிலும், நிலங்களிலும் பல்வேறு தகைமைகளில் வேலைகளில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

   90 வயதுடைய சுது மெனிக்கா என்ற முதிய கிராமத்தவர் 7 வயதில் இருந்து திருமணம் செய்து தனக்கென வீடு ஒன்றை அமைத்துக் கொள்ளும்வரை தொடர்ச்சியாக பண்டார குடும்பத்திலே குசினியில் வேலை பார்த்து வந்தாள். அவள் தான், குழந்தையாக இருந்த போது தன்னுடைய தாயும் பண்டார குடும்பம் ஒன்றிலே வேலை செய்ததாக கூறுகிறாள். சுது மெனிக்காவுடைய பேத்தியான 8 வயதுடைய ரன் மெனிக்கா தற்போது புஞ்சிரால வீட்டிலே வேலை செய்து வருகிறாள்.

   வேலைக்கு, ஒரு பிள்ளையை சேர்க்கும் ஆகக்குறைந்த வயதெல்லை 14 என குறிப்பிட்டு 1950ம் ஆண்டு சட்டம் ஒன்று ஆக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த 3 குடும்பத்தினரும் (அஃது புஞ்சிரால, முதலிகே, மற்றும் பண்டார ஆகிய குடும்பங்கள்) இக் கிராமத்திலிருந்த 10 வயதிற்கு குறைந்த சிறுவர்களை தமது வேலையாட்களாக தொடர்ந்தும் வேலையில் ஈடுபடுத்துகின்றனர்.

   அண்மையில் அரசாங்க அலுவலர் ஒருவர் கெலேகமவுக்கு விஜயம் செய்து இந்த நடைமுறை பற்றி அக்குடும்பத்தினரை கேள்விக்குட்படுத்தினார். எவ்வாறாயினும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் நடைமுறை இக்கிராமத்தினுடைய வலிதான வழக்காறு என்றும், அதனை தடுப்பதற்குரிய சட்டம் ஆக்கப்பட்டதன் பின்னரும் இந்த நடைமுறை நீண்டகாலமாக இருந்து வருகிறது என வாதிட்டனர். மேலும் தாம் வேலைக்கு அமர்த்தியுள்ள சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாதவிடத்தும், வீட்டு வேலைக்குரிய பயிற்சியை பெறுகின்றனர் அதன் மூலம் வயதாகினாலும் தொழில் பாதுகாப்பை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டனர். தம்மிடம் சிறுவர்களாக வேலை செய்த பலர் இன்று மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டு பணியாளர்களாக வேலை செய்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டனர். கெலேகமயில் காணப்படும் இந்த வழக்காறினுடைய வலிதான தன்மையை பற்றி அறிந்து கொள்ள அரசாங்க அலுவலர் உமது ஆலோசனையை நாடுகிறார்.

   அவருக்கு ஆலோசனை வழங்குக.

3. (அ) "சட்டவாக்கம் அநீதியானதாக ஆக்கப்பட்டிருக்க முடியாது என்ற ஊகமானது, சில நியதிச் சட்டங்களுக்கு பின்னோக்கி ஆளும் செயுற்பாட்டை வழங்கும் நடைமுறைக்கு எதிராக செயற்படுகிறது. நியதிச் சட்டங்கள் பின்னோக்கி ஆளும் செயற்பாட்டை வெளிப்படையாக குறிப்பிடாதவரையில், நியதிச்சட்டங்கள் ஆக்கப்பட்ட பின்னர் வரும் வழக்குகள் அல்லது நிகழ்வுகளுக்கு மட்டும் செயற்பாடு கொடுக்கப்படக் கூடிய வகையில் அந்நியதிச்சட்டங்கள் பொருள்கோடல் செய்யப்படல் வேண்டும்".

Maxwell on the Interpretation of statutes 12[th] edition, p. 215.

இயைபான தீர்ப்புச் சட்டங்களை துணை கொண்டு மேலே தரப்பட்ட கூற்றை விமரிசித்து பரீட்சிக்க.

(ஆ) "ஜெனராலியோ ஸ்பெசலிபஸ் னொன் டெகோரன்ட் (Generalia Specialibus non degorant) என்பது பொருள் கோடல் ஊகம் ஒன்றாகும். இது பொது நியதிச் சட்டம் ஒன்றை வினைத்திறன் மிக்க வகையில் வலிதற்றதாக்க அல்லது பொது நியதிச்சட்டம் ஆக்கப்பட முன்பு நடைமுறையில் இருந்த விசேட சட்டங்கள் அனைத்தையும் மெருகூட்ட வழி வகுக்கின்றது".

இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் உமது விடையை விளக்குக.

4. பெரேரா எதிர் சில்வா என்ற ஒரு வழக்கு a, b, c, d மற்றும் e ஆகிய நிகழ்வுகளை உள்ளடக்கியது. எனினும் நீதிபதிகள் a, b மற்றும் c ஆகிய முக்கிய நிகழ்வுகளை மாத்திரம் கருத்தில் எடுத்தனர். இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் 1968ம் ஆண்டு தீர்ப்பினை வழங்கினர்.

கீழே தரப்பட்ட சூழ்நிலைகளை நீதிமுறை முந்தீர்ப்பு கோட்பாட்டை துணை கொண்டு ஆராய்க. (உமது விடைக்கு எந்த அடிப்படையில் வந்தீர் என்பதை தெளிவாக விளக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறீர்).

(அ) a, b, c மற்றும் d ஆகிய அனைத்து முக்கிய நிகழ்வுகளை கொண்டு தீர்க்கப்படுகின்ற வழக்கிலே சில்வா எதிர் பெரேரா வழக்கை 1970ம் ஆண்டு கோமறைக்கழகம் பின்பற்ற பிணிக்கப்பட்டுள்ளதா?

(5 புள்ளிகள்)

(ஆ) 1973ம் ஆண்டு a, b, c ஆகிய(அனைத்தும் முக்கிய)நிகழ்வுகளை கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரேயொரு நீதிபதியால் வழங்கப்படும் தீர்ப்பு பெரேரா எதிர் சில்வா வழக்கை புறத்தொதுக்குமா?

(5 புள்ளிகள்)

(இ) பிரியந்த என்ற ஒரு சட்டதரணி a, b, c மற்றும் f ஆகிய நிகழ்வுகளை கொண்ட வழக்கு ஒன்றிலே தோன்றுகிறார். இவ்வழக்கு தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கேட்கப்பட்டு கொண்டிருக்கிறது. இவ்வழக்கு 3 நீதிபதிகள் முன்னிலையில் கேட்கப்படுகிறது. பிரியந்த மேலே தரப்பட்ட மூன்று வழக்கு தீர்ப்புகளுடைய பிரதிகளையும் பெற்றுக்கொண்டான். (அஃது பெரேரா எதிர் சில்வா மற்றும் வினா இல. 4 (அ), 4 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தீர்ப்புகள்). இங்கு

தரப்பட்ட தீர்ப்புகளில் ஏதேனும் ஒன்றை தனது வழக்கிற்கு முந்தீர்ப்பு ஒன்றாக பயன்படுத்த முடியுமா என உம்மிடம் ஆலோசனை கேட்கின்றார். பிரியந்தவுக்கு ஆலோசனை வழங்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி ஆ - உரோமன் சட்டம்

5. செல்வந்த உரோம விடொன்றின் தலைவனும் முதிய ஆணாகிய குளோடியஸ் இறுதி விருப்பாவணம் ஒன்றை ஆக்க தீர்மானித்தான். அவனுக்கு ஜுலியஸ், கஸ்கா, ரோமாலுஸ் ஆகிய மூன்று மகன்மார்களும், கிளியோபற்றா, போர்சியா என்ற இரண்டு மகள்மாரும் இருந்தனர். அவன் தனது விருப்பாவனத்தில், தன்னுடைய சொத்துக்களை ஜுலியஸ், கஸ்கா மற்றும் தன்னுடைய நண்பன் மகன் புளுட்டோ ஆகிய மூவருக்கும் சம பங்காக வழங்கியிருந்தான்.(புளுட்டோவின் தந்தை உரோம நாட்டில் தேச துரோகி என பெயரிடப்பட்டு இருந்தான் அவன் புளுட்டோவை தனியே விட்டு நாட்டை விட்டு வெளியேறிவிட்டான்) மேலும் அவனுடைய விருப்பாவணத்தில், கிளியோபற்றாவுக்கு தங்கச்சங்கிலி ஒன்றும், தனது மனைவி வீனஸிற்கு ஒரு எமெரோல்ட் பதக்கம் மற்றும் காதணி ஒன்றுக்கான ஏற்பாடு ஒன்றும் இருந்தது. மேலும் அவன் தன்னுடைய விருப்பாவணத்தில் ரோமாலுஸ்ற்கு வழியுரிமையை இல்லாதொழித்திருந்தான். ஏனெனில் ரோமலுஸ் உரோமன் இராணுவத்தில் சேர்ந்தால் தான் போரின் போது கொல்லப்படுவேன் என்ற அச்சத்தினாலும் உயிரோடு வீட்டுக்கு திரும்பமாட்டேன் என்ற பயத்தினாலும் போரில் இருந்து விலகி அப்பால் இருந்தான். போர்சியாவின் பெயர் விருப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. குளோடியல் உடைய அயலவர்களான இரண்டு உரோமர்கள் விருப்பாவணத்தில் சாட்சி கையெழுத்திட்டனர்.

(அ) குளோடியல் வலிதான விருப்பாவணம் ஒன்றை ஆக்கியுள்ளானா? உரோம சட்ட வழியுரிமையுடன் தொடர்புறுத்தி உமது விடையை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சொத்து பங்கீட்டில் தம்மை நியாயமாக கருதவில்லை என்ற அடிப்படையில் ரோமாலுஸ், போர்சியா, கிளியோபற்றா ஆகியோர் விருப்பாவணத்தை கேள்விக்குட்படுத்த விரும்புகின்றனர். அவர்களுக்குரிய ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் இருப்பின் அவற்றினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

6. "உரோம நியதிச் சட்டமானது, சில பிழையான செயல்களின் விளைவாக ஏற்படும் கடப்பாடுகளுடன் தொடர்புபடுகிறது. இது ஒரு பரந்த கோட்பாடு ஆகும், இது தண்டனை, இழப்பீடு மற்றும் கடும்பொறுப்பு விதி போன்ற பின்னைய சட்ட விரிவாக்கங்கள் என்பவற்றை 'தவறாளி' மீது விதிக்கிறது.".

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? தீங்கியல் மற்றும் மருவிய தீங்கியல் கோட்பாடுகள் போன்றவற்றுடன் தொடர்புறுத்தி உமது விடையை விளக்குக.

7. புருட்டஸ், டைட்டுஸ் ஆகிய இருவரும் அடுத்தடுத்த காணிகளில் கட்டப்பட்டிருந்த வீடுகளில் வசித்து வருகின்றனர். புருட்டஸ் வசிக்கும் காணியில் தண்ணீர் வசதியின்மையால் அவனுக்கு in jure cessio அடிப்படையில் தண்ணீர் அள்ளுவதற்கான உரிமை வழங்கப்பட்டிருந்தது. புருட்டஸ் கெசியஸ்க்கு தனது வீடு மற்றும் காணி என்பவற்றின் மீது பயனல உரித்தை வழங்கிவிட்டு புதிய வீடு ஒன்றுக்கு சென்றான்.

பின்வரும் சூழ்நிலைகளின் கீழான சட்ட நிலைமைகளை ஆராய்க.

(அ) டைட்டுஸ் தனது கிணற்றில் இருந்து கெஸியவிற்கு தண்ணீர் அள்ளும் உரிமையை மறுக்கிறான்.

(ஆ) கெசியஸ் வீட்டை தின்பண்ட கடையொன்றாக மாற்றினான்.

(இ) கெசியஸ் அப்பிள் மரத்தில் இருந்து சில பழங்களை பறித்து ஜேம் தயாரித்தான். அவன் அம்மரங்கள் கெசியஸ் உடைய காணியில் இருப்பதாக நம்புகிறான். ஆயின் அவை டைட்டுஸ் உடைய காணியில் இருந்தன.

(ஈ) புருட்டுஸ் சில கோழிகளை வளர்க்கிறான். அவை அடிக்கடி அயல் காணிகளுக்கு சென்று வருகின்றன. இதனை அறிந்த கெசியஸ் தன்னுடைய காணிக்கு கோழிகள் வரும்வரை காத்திருந்து அவன் அவற்றை பிடித்து வெளியில் தப்பிச்செல்லாதவாறு கோழி கூடு ஒன்றில் அடைத்து வைத்து விட்டான். கெசியஸ் கோழிகளுக்கு உரிமை கோருகின்றான்.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு பற்றி குறிப்பெழுதுக.

(அ) 'தாதை அதிகாரம்' என்ற எண்ணக்கரு

(ஆ) உரோம சட்ட திருமணம்.

(இ) உரோமன் சட்டம் பற்றிய சுருக்கமான வரலாறு.

(ஈ) சம்மதம் பெற்ற ஒப்பந்தங்கள் (Contracts consensu).

(பதிப்புரிமையுடையது)